# வடமராட்சி பகுதியில் விமானத் தாக்குதல்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 18 இதழ் 198
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3 – 9 – 1993


## மீனவர் படகுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)
வடமராட்சிகிழக்குப்பகுதியில் நேற்று நடைபெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலில் மீனவர்களுக்குச் சொந்தமான பல படகுகள் சேதமடைந்தன. நேற்று நண்பகல் 12 மணியளவில் குடத்தனை மற்றும் பொற்பதி பகுதிகளை வட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## முல்லையில் புக்காரா குண்டு வீச்சு

முல்லைத்தீவு)
முல்லைத்தீவு கிளம்பிப்பகுதியில் நேற்று முன்தினம் இரு தடவைகள் புக்காரா விமானங்கள் இரண்டு கடும் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டுள்ளன.
நேற்று முற்பகல் 10 மணியளவில் முதலாவது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
இதன்போது ஐந்து குண்டுகள் வீசப்பட்டன. மீண்டும் பிற்பகல் 2-30 மணிக்கு இப்பகுதிக்கு வந்த புக்காரா

(4-ம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் ராணுவம் பொலிஸ் பாதுகாப்பு உஷார் நிலையில்

## தெற்கில் தாக்குதல் நடத்த புலிகள் தயார் என அரசு தகவல்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையினரின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மற்றும் கிழக்குப்பகுதியிலும் தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை ஆதாரம்காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன- இதன்பொருட்டு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பொலிஸ் - இராணுவப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உஷார்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதியில் தாக்குதல்களை நடத்த விடுதலைப்புலிகள் அந்தப்பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மக்கள் கூடுதலாக நடமாடும் இடங்களில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரும் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நாசகார நடவடிக்கைகளும் வன்முறைகளும் நடைபெறக்கூடுமென வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் இரகசியத் தகவல்களை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியுள்ளதைத் தொடர்ந்தே கொழும்பு உட்பட நாட்டில் உள்ள பிரதான நகரங்களில் தற்போது தாம் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்பு

(2-ம் பக்கம் பார்க்க)

## ஹமில்டனை திருப்திப்படுத்த பதவி நீடிப்பு

(கொழும்பு)
கூட்டுப்படை தளபதித்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் பதவிக் காலத்தை நீடிக்கும்படி ஜனாதிபதி விஜேதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.
ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் பதவிக்காலம் கடந்த ஆகஸ்ட் 18ம் திகதியுடன் முடிவடைய இருந்ததும் அதனையடுத்து அவரை அவுஸ்திரேலிய தூதுவராக நியமிக்க அரச உயர் மட்டத்தில் பெரு

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு வந்த ரூ. 2லட்சம் பெறுமதியான புத்தகங்கள் கொழும்பில் களவு

(யாழ்ப்பாணம்)
பிரிட்டனில் யாழ். பல்கலைக்கழகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சுமாரி இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொழும்பு தபாலகத்தில் களவாடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம்பார்க்க)

## நூதனசாலை பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)
கொழும்பு தேசிய நூதனசாலையின் பாதுகாப்பு பொலிசாரிடம் விரைவில் ஒப்படைக்கப்படவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.
கொழும்பு நூதனசாலையில் அண்மைக்காலங்களில் பெறுமதி வாய்ந்த புராதன சின்னங்கள் பல களவாடப்பட்டதினால் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

(4ம் பக்கம் பார்க்க)

## கல்முனைக் கடலில் படையினரால் படகு அழிப்பு

(கொழும்பு)
இளாலிக் கடற்பரப்பில் கல்முனைப் பகுதியில் சென்று கொண்டிருந்த படகு ஒன்று கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் அப்படகில் பயணம் செய்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் கூட்டுப் படை தலைமையகம் நேற்று தெரிவித்தது.
இப்படகில் பெருமளவு வெடி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமானியை அரசியலுக்கு கொண்டுவர முயற்சி

(கொழும்பு)
காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் மனைவியான ஸ்ரீமானி அத்துலத்முதலியை அரசியலில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியை திருமதி

(4-ம் பக்கம் பார்க்க)

## செம்மணி பகுதியில் சடலம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் செம்மணி வயல் பகுதியிலிருந்து நேற்று இரவு இனந்தெரியாத சடலமொன்று கண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் காவல்துறையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படகு மீது ஸ்ரீலங்கா கடற்படை தாக்கு

### ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் படகு என நினைத்து இந்திய மீன்பிடிப்படகு ஒன்றின் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் மீனவர் ஒருவர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளார்கள். இவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலோலி ராணுவ முகாமில் வெடிபொருட்கள் வெடித்தன

### 2 படையினர் பலி; 4 பேர் படுகாயம்!

(மட்டக்களப்பு)
வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புலோலி இராணுவமுகாமில் ஏற்பட்ட வெடியருந்து வெடிப்பில் இரு இராணுவத்தினர் பலியானதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.
புலோலி இராணுவ முகாமிலிருந்து மற்றொரு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்வதற்காக இராணுவத்தினர் ஊர்திவண்டி ஒன்றில் வெடி மருந்துகள் ஏற்றிக்கொண்டி

(4-ம் பக்கம் பார்க்க)

## பொலிகண்டி கடல் பகுதியில் பீரங்கித்தாக்கு

(நெல்லியடி)
வடமராட்சி கிழக்கிலிருந்து காங்கேசன்துறைக்கு கடல் ரோந்தில் ஈடுபட்ட இரண்டு கடற்படை விசைப் படகிலிருந்து சுமார் அரை மணிநேர பீரங்கி ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.
இச்சம்பவம் நேற்று 7-30 காலை மணியளவில் பொலிகண்டி கடற்பரப்பில் நடைபெற்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### LONDON EXAMS

C. I. M A. (Stage-1), I. A B. (Foundation, Intermediate, Final ஆகிய வகுப்புகள் 05-09-93 ஆரம்பமாகின்றன. Computer Basic, Lotus, வகுப்புகள் உடன் ஆரம்பமாகின்றன குறைந்த கட்டணம், சிறந்த பெறுபேறுகள். உறுதியான கல்வியைப் பெற School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. (C-438)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், இரைப்பு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், கைப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி கி. இராசரத்தினம் 121, 8-ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். (இ-416)

## வியாபாரம் பெருக
## விளம்பரம் செய்க

### University of Jaffna
### Tender Notice

Tenders are invited from contractors registered for Civil Engineering works with University of Jaffna or ICTAD for;

a) Addition / Improvements to cycle sheds at administration block and Faculty of Arts.

b) Addition / Improvements to parking facilities at Faculty of Science.

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 7-9-93—10-09-93 on producing receipt from Bursar University of Jaffna for the payment of the following tender fees for each tender,

a) refundable-Rs. 2000/-

b) non - refundable Rs 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 21-9-93 at 10.00 a.m.

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR
University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna. A-3392


# மாதிரி குடியேற்றத் திட்டம் சுன்னாகத்தில் திறப்பு

(உடுவில்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவில் சுன்னாகம் தெற்கில் மாதிரிக்குடியேற்றத் திட்டமொன்று திறந்துவைக்கப்பட்டது.

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசின் உதவித் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இக்குடியிருப்பு பகுதியில் 14 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 22 பரப்பு நிலத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒன்றே கால் பரப்பு வீதம் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் எட்டு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அளவெட்டி, கட்டுவன், மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து சுன்னாகம் தோட்ட வெளிகளில் தற்காலிகமாகக் குடியிருந்த குடும்பங்களுக்கு இவ் வீடுகள் கையளிக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக பொறுப்பாளர் திரு. கி. ரவி குடியிருப்பாளர்களின் வீடுகளுக்குரிய திறப்புகளை கையளித்தார்.

குடியிருப்பாளர்களின் சுகாதார வசதிகளுக்காக பல மலசல கூடங்களும், குழாய்க் கிணறு, பொது நூல்நிலையம் போன்றனவும் இக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

திறப்பு விழாவைத் தொடர்ந்து இக்குடியிருப்பு பகுதியைக் கல் மத்தியில் யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு இளம்பருதி, யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் திரு. சிவரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழக பொறுப்பாளர் திரு கி. ரவி உட்படபலர் கருத்துரைகள் வழங்கினர். -109-சி-

## தொடர்ந்து தடுப்புக் காவலில்

(பண்டத்தரிப்பு)

சவுதிஅரேபியாவில் நான்கு வருடங்கள் வேலை செய்து விட்டுத் திரும்பியபோது கொழும்பில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பண்டத்தரிப்பு பனிப்புலத்தை சேர்ந்த பவளராசா என்னும் வாலிபர் மூன்று மாத காலமாகியும் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை.

இவரை பிணையில்விடுமாறு கோரி இவரது தாயார் கொழும்பிலுள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (72)

## அன்பளிப்பு

(ஏழாலை)

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்திற்கு இடப்பெயர்வை ஒன்று சேர்ந்ததாலில் கிழக்கைச் சேர்ந்த பொ. நல்லையா குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. -165-

## குளம் புனரமைப்பு

(உடுவில்)

பேரூட் நிறுவனத்தின் ஆதரவுடன் வலிகாமம் மேற்கில் உள்ள பாண்டியாவத்தைக்குளம், பொன்னாலை சின்னக்குளம், சங்கரத்தைக்குளம் சங்கானை பேய்க்குளம், அராலி வடக்குக் குளம் ஆகியன ஆழமாக்கப்பட்டுள்ளன. (109)

## தலைமைத்துவ பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்தினுல் நடத்தப்படவுள்ள தலைமைத்துவப் பயிற்சி நெறி அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் என யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டினைலாவா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் இப்பயிற்சி நெறி மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள சனசமூக நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் இத்தலைமைத்துவ பயிற்சி நெறியில் பங்குபற்றமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

## இரவுநேர நூலக சேவை

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்பட்டுவரும் பொதுநூலகத்தின் இரவு சேவையை குழுவின் நிர்வாக இயக்குனர் திரு. க. ஜீவகதாஸ் நேற்று ஆரம்பித்துவைத்தார்.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி இந்நூலகம் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இயங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

## மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் போராளியான செல்வன் அரியநாயகம் ஸ்ரீகாந்தாவின் (திவேஷ்) மிருதங்க அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமை தாங்கும் இவ்விழாவில் யாழ். மாவட்ட சிறப்பு தளபதி செல்வராசா, மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனு ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பிக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக ஆணைப்பொறுப்பாளர் சேரலாதன் வரவேற்புரை நிகழ்த்துவார். கலைஞர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துணைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் கௌரவிப்பார். (ம)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜோதிட விஞ்ஞான நூலாசிரியர் திரு. த. சத்தியதாசன் எழுதிய அக்டோபரில் வியாழ மாற்றமும், சனி வக்கிர மாற்றமும் அடங்கிய சஞ்சிகை வெளியீட்டு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12-30 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறும். அன்றைய தினம் கடவுள் சுவாமிகளின் உத்தராடாதி நட்சத்திர - மாதாந்த குருபூசை தினமும் கொண்டாடப்படும். (கி)

## வீரவணக்கக் கூட்டம்

(ஆனைப்பந்தி)

யூன், ஆகஸ்ட் மாதங்களில் வீரச்சாவடைந்த தீவக கோட்ட மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் அண்மையில் யாழ். புனையிரத நிலையத்தில் நடைபெற்றது.

தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்னிமாகம் பாதிக்கப்பட்ட பெண்கள் புனர் வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி மாலினி யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினர்கள். (101)

# இன்றறக் கழகத்தின் 5வது மண்டல மாநாடு

(யாழ்ப்பாணம்)

முதலாவது இன்றறக் கழகத்தின் ஐந்தாவது மண்டலத்திற்கான மாநாடு கடந்த 30-ம், 31-ம் திகதிகளில் யாழ் பரி. யோவான் கல்லூரி 'பீட்டோ' ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட 15 பாடசாலைகளைச் சேர்ந்த 400 இன்றறக் கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். முதலாம் நாள் நிகழ்விற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு பியர் சுவைற்சர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக சம்பந்தராகியார் கல்லூரி அதிபர் வண. பேனுட் அடிகளாரும் கலந்து கொண்டார்.

தென்கிழக்கு ஆசியாவிலேயே இன்றறக் கழகம் யாழ். பரி. யோவான் கல்லூரியில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. (158-ரி)

# இந்துக் கோயில்களில் இன்றுமுதல் பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

இந்துக்கோவில்களும் தர்ம நிலையங்களும் தொடர்ந்து தாக்கப்படுவதை இடைநிறுத்தவும் பூசைகள் வழிபாடுகள் தடைப்பட்டுள்ள கோவில்கள் திருக்கேதீஸ்வரம் உட்பட சகல தரும நிலையங்களும் மீளத்திறக்கவும் படையினரின் தாக்குதலுக்குள்ளான சம்புகோளம் ஐயபுனேஸ்வர சிவன்கோவில், பருளை விநாயகர் கோயில், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில் என்பனவற்றுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மீளப்பெற வேண்டி இன்று வெள்ளிக்கிழமை சகல இந்துக் கோவில்கள், தரும நிலையங்கள் ஆகியவற்றில் சகலரும் கூடிப் பிரார்த்திக்குமாறும் தொடர்ச்சியாக இவ்வகை நிகழ்வுகள் இடம் பெருதிருக்கப் பிரார்த்திக்குமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற கண்டனத்தீர்மானம் பற்றிய கூட்டத்தில் பேரவையினர் மேற்கண்ட தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளனர். (154)

# தமிழீழ நீதிமன்றில்

## சைக்கிள் திருட்டு வழக்கு
## எதிரிக்கு 3 மாத சிறையும் 800 ரூபா அபராதமும்

(யாழ்ப்பாணம்)

மூவாயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்றைத் திருடியமைக்காக சுந்தையா தில்லைநாதன் மீதும், அதற்கு உடந்தையாக இருந்தமைக்காக இராசகாரி துரைராசா என்பவர் மீதும் சுன்னாகம் காவல்துறையினரால் குற்றம் சாட்டி தொடரப்பட்டவழக்கு சுன்னாகம் தமிழீழ நீதிமன்றத்தில் கடந்த 30-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதியாளர்கள் திரு ச. பூவேந்தன், திரு. க. நேசன், திரு. சி ஒப்பிலான் ஆகியோர் தலைமையில் நீதிமன்றம் கூடிய போது வழக்கு விசாரணை ஆரம்பமானது.

இவ்வழக்கு விசாரணையின் போது, இராசகாரி துரைராசா தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இவருக்கு எண்ணூறு ரூபா அபராதமும் மூன்று மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. முதலாம் எதிரியான சுந்தையா தில்லைநாதன் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காமையால் அவரை கைதுசெய்து செப்ரெம்பர் 29ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்செய்யும்படி பிடிஆணை பிறப்பித்து சுன்னாகம் காவல்துறையினருக்கு நீதியாளர் திரு. ச. பூவேந்தன் உத்தரவிட்டார். களவாடப்பட்ட சைக்கிள் அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

### எதிரிக்கு எச்சரிக்கை

கட்டையன் புலேந்திரன் என்பவர் சட்டவிரோதமான ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்ததாக சுன்னாகம் காவல் துறையினரால் குற்றம்சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். இப்படியான பிழையான செயல்களில்வயது முதிர்ந்த காலங்களில் இனிமேல் ஈடுபடக்கூடாதென நீதியாளர் எதிரியை எச்சரித்து நூறு ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

### 500 ரூபா அபராதம்

கிருஷ்ணபிள்ளை தருமலிங்கம் என்பவருக்குச் சொந்தமான நாலாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான வெற்றிலையை திருடியதாக சாட்டப்பட்ட குற்றச்சாட்டை எதிரியான கணபதிப்பிள்ளை பகிரதருபன் ஒப்புக்கொண்டார். அவருக்கு ஐநூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

### விசாரணை ஒத்திவைப்பு

செல்வராசா கிருஷ்ணராசா என்னும் பன்னிரெண்டுவயது சிறுவன் செல்லப்பா விஜேந்திரன் என்பவருக்குச் சொந்தமான ஹீரோ துவிச்சக்கர வண்டியை திருடியமைக்காக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது செல்வராசா கிருஷ்ணகுமார் குற்றத்தை ஒப்புக்கொண்டார். சிறுவனின் எதிர்காலம் குடும்ப நிலைகளை விசாரித்து அறிந்த நீதியாளர்கள் தீர்ப்பு வழங்குவதை செப்ரெம்பர் ஆறும் திகதிக்கு ஒத்திவைத்தனர். (109-கி)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாகச் சேர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இவர்கள் பஸ்தரிப்பு நிலையங்களிலும், வீதிகளிலும் நின்று சந்தேகத்துக்குரிய வாகனங்களையும், பஸ்வண்டிகளையும் சோதனையிடுவதுடன் சந்தேகத்துக்குரிய பொதுமக்களையும் விசாரணை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சரியான ஆவணங்கள் இல்லாது நடமாடும் எவரும் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்படுவர் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வி)

**மணிவாக்கு**

என் ஒழுக்கத்தை நான் காத்துக்கொண்டால் என் நற்பெயர் தன்னைத்தானே காத்துக்கொள்ளும்.

— பிவைட் எல்மூட்

# நமது நோக்கு

## கலப்படம்! கவனம்!!

1981ல் ஸ்பெயின் நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் ஒரு மர்ம நோயினால் இறந்தார்கள்! பலர் அந்த நோயால் பாதிக்கப்பட்டார்கள்!

அதிர்ச்சியடைந்த அந்த நாட்டு மருத்துவர்கள் ஐந்து மாதங்களுக்கு மேலாகப் பரிசோதனைகள், ஆய்வுகள் நடத்தி மர்ம நோயின் காரணத்தை கண்டுபிடித்தார்கள்.

காரணம் என்ன தெரியுமோ? இறக்குமதிசெய்யப்பட்ட சமையல் எண்ணெயில் கலப்படம்!

கொள்ளை இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, மக்களின் உடல்நலத்தைப் பற்றிய சிந்தனை எதுவும் இல்லாமல் உணவில் கலப்படம் செய்வது மாபெரும் துரோகமாகும்.

போர்க்காலச் சூழ்நிலையால், மக்கள் தொழில் இன்றி வருமானமின்றி, போசாக்கான உணவின்றி வாடும்போது, கலப்படம் செய்யப்பட்ட உணவுகளால் ஏற்படும் பாதிப்புக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்பட்ட பருப்பு மூடைகளில், கழிவுப் பொருட்களும் நிரப்பப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகச் செய்தி வந்தது.

இதே வேளை, எமது பகுதியிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற சில வகைப் பொருட்களிலும் கலப்படம் செய்யப்படுகின்றது எனக் குறை கூறப்படுகின்றது.

தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் இது பற்றி அக்கறைகொண்டு, ஆய்வுகள் நடத்தி, சில அறிவுறுத்தல்களை உற்பத்தியாளர்களுக்கு வழங்கியது.

குறிப்பாக மென்பானம், பழரசம் ஆகியவற்றைத் தயாரிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் வெளியிடப்பட்டன.

சில உற்பத்தியாளர்கள் இவற்றை முழுமையாகக் கடைப்பிடிக்கவில்லை என அந்த நிறுவனத்தின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் உடல் நலத்தைக் கவனியாது, நிறுவனத்தின் அறிவுறுத்தல்களையே உதாசீனம் செய்வது கண்டிக்கத்தக்கதாகும்!

எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற நோக்கில் செயற்படுகிறார்களோ?

பொதுமக்கள் கலப்படப் பொருட்களில் கவனமாக இருக்க வேண்டும். பொருட்களை வாங்கும்போது, காலாவதியாகும் திகதிகள் போன்ற சில குறிப்புகளைக் கவனித்து வாங்குவது நல்லது.

சமய குழுவினால்

# பணயம் வைக்கப்பட்டிருந்த 150 சிறுவர்கள் மீட்கப்பட்டனர்

(புவனஸ் அயர்ஸ்)

ஆர்ஜன்ரீனாவின் தலைநகர் புவனஸ் அயர்ஸிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஒரு மதக் குழுவினால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 150க்கு மேற்பட்ட சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு இடங்களிலும் கடத்திவரப்பட்ட இந்தச் சிறுவர்கள் "கடவுளின் குழந்தைகள்" என்ற அதிதீவிர சமய குழு ஒன்றினால் பல வீடுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இங்குள்ள அமெரிக்க, கனேடியத் தூதரக அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆர்ஜன்ரீனா அரசு இந்தச் சிறுவர்களை மீட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலிஸார் "கடவுளின் குழந்தைகள்" எனத் தம்மைப் பிரகடனப்படுத்தி பிள்ளைகளைக் கடத்திப் பணயக் கைதிகளாக வைத்திருந்த 20 பேரைக் கொண்ட குழுவைக் கைது செய்தது.

16 வயதிற்கு உட்பட்ட இந்த 150 சிறுவர்களும் தற்போது அரசு பாதுகாப்புடன் சுதந்திரம் பெற்றுள்ளனர். இந்தப் பாலர்களின் சொந்த இடம் அறிவது கஷ்டமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (தே-கி)

# வல்லரசுகள் ராணுவ செலவை குறைக்கத் தொடங்கியுள்ளன

(நியூயோர்க்)

உலகின் பல நாடுகள் தங்கள் இராணுவச் செலவை அதிகரித்தும், இராணுவ தளபாடங்களைக் குவித்தும் வரும் இவ்வேளையில் பெரிய வல்லரசுகள் தங்கள் ராணுவச் செலவைக் குறைக்கத் தொடங்கியுள்ளன.

ஏற்கனவே ரஷ்யா துருப்புகளின் தொகையைப் பன்மடங்காகக் குறைத்ததோடு, குறுந்தூர ஏவுகணைகளை அழித்தும் அணு ஆயுத உற்பத்தியைக் குறைக்கவும் தொடங்கிவிட்டன. முன்னர் சோவியத் யூனியனுடன் இணைந்திருந்த சுதந்திரமாகச் செயற்படும் பொதுநலவாய நாடுகளும் இராணுவச் செலவை இந்தவகையில் குறைத்துக்கொண்டன.

தற்போது அமெரிக்காவும் 5 வருடத் திட்டத்தின் கீழ் தனது இராணுவச் செலவைக் குறைக்கத் திட்டம் தீட்டியுள்ளது.

அமெரிக்கத் துருப்புக்களின் தொகையை குறைத்தல், ஆயுத தளபாட உற்பத்திகளை குறைத்தல், போர்க் கப்பல், மற்றும் போர் விமானங்களின் தொகையிலும் கணிசமான தொகையைக் குறைக்கவும் அமெரிக்கா தீர்மானித்துவிட்டது.

உயர்ரகத் தொழில் நுட்பப் பாதுகாப்பு சாதனங்களைத் தக்கவைத்தபடி இந்த இராணுவ செலவுகள் குறைக்கப்படவுள்ளன. இதனால் ஏற்படும் சேமிப்பை உள்ளூர் தேவைக்காக பயன்படுத்தவுள்ளனர்.

1999-ல் ராணுவம் 14 பிரிவிலிருந்து 10 ஆகக் குறைக்கப்படும். கடற்படை 13 விமானம் தாங்கிக் கப்பல்களை இழக்கும். ஆகாயப் படையின் கீழ் படைப்பிரிவு 20 ஆகக் குறைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறுந்தூர ஏவுகணைத் தயாரிப்பும் மற்றும் சில போர் விமான தயாரிப்புகளும் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 21 ஆயிரம் மில்லியன் டொலர் சேமிப்பு ஏவுகணை குறைப்பினால் மீதப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவமே தஞ்சமென இருந்த வல்லரசுகள் தங்கள் ஆயுதபலத்தை குறைக்க முற்படும் இவ்வேளையில், மூன்றும் உலக நாடுகளும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் ராணுவச் செலவை அதிகரித்து வருவதும் ஆயுத உற்பத்தி நாடுகளை பணபலம் பெருக்கவைத்துத் தாங்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவதும் வேலைக்குரிய விடயம் என்று தெரிவிக்கப்படுகிறது. (கே)

## திருமண, இறப்பு

# அத்தாட்சிப் பத்திரங்கள் விரைவாக வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் 1954ம் ஆண்டிற்கு பிற்பாடு பிறந்தவர்களின் பிறப்புச் சான்றிதழ் படிவங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரியவருகிறது. கொழும்பிலிருந்து வேண்டிய தொகைப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படாமையே இதற்கு காரணமென அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க 1954-ம் ஆண்டிற்கு முன்பு பிறந்தவர்களுக்கு வழங்கப்படும் ஒருபக்க பிறப்புச் சான்றிதழ் படிவங்களுக்கும் தட்டுப்பாடு இல்லையென்றும், இந்த விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பம் கிடைத்த சில நாட்களுக்குள் பிறப்புச் சான்றிதழ்வழங்கப்படுவதாகவும் யாழ். மாவட்டப் பதிவாளர் தெரிவித்தார்.

திருமண அத்தாட்சிப் பத்திரம், இறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்ற படிவங்களுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லையென்றும் இப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு விரைவாக வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (162)

## ஆசிரியர் சங்க தலைவர் மறைவு

# தொழிற்சங்க உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்பேசும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற ஆணித்தரமான கருத்தைக் கொண்டிருந்த ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. எச். என். பெர்ணன்டோவின் மறைவு தொழிற்சங்க உலகத்துக்கும், ஆசிரிய சமுதாயத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

காலஞ்சென்ற ஆசிரியர் சங்கத் தலைவர் எச். என். பெர்ணன்டோவின் மறைவை யொட்டி வடமாகாண ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

1987-ம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளின்போது வடபகுதிக்கு நேரில் விஜயம்செய்து தமிழ் மக்களின் இன்னல்களை கண்டறிந்து அரசுக்கெதிராக அறிக்கைகளை விடுத்தவர் அமரர் பெர்ணன்டோ. ஆசிரியர் சங்கங்களுக்கு மட்டுமன்றி, ஏனைய தொழிற் சங்கங்களுக்கும் அறிக்கைகளை அனுப்பி, தென்னிலங்கையில் வாழும் மக்களுக்கு தமிழ் மக்கள் படும் இன்னல்களை அறிந்துகொள்ளச் செய்வதற்காகவும் பாடுபட்டவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கடமையாற்றி ஆசிரியர்களுக்கு சேவை புரிந்தவர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (109-கி)

**அழிந்த வன வளங்களை மீள் வனமாக்குவோம்**

**கண்காட்சி**

(ஏழாலை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அச்சுவேலி அலகு நாளை சனி, ஞாயிறு தினங்களில் சுகாதார பொருள் கண்காட்சி ஒன்றையும், தையல் நெறி பயிலும் மாணவர்களின் கலை நிகழ்வு ஒன்றினையும் அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நடாத்தவிருக்கின்றது. 765

# இராசிபலன்

03-09-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 18)

துதியை நண்பகல் 12-07 வரை, உத்தரட்டாதி ந. இ 12-11 வரை, இராகுகாலம் காலை 10-35முதல் 12-05வரை, சுபநேரம் காலை 6 05 முதல் 7-35 வரை, அமிர்தசித்த யோகம்.

**மேடம்:** சுபகாரியத் தடை, தொழில் மந்தம், மனக்கலக்கம்.

**இடபம்:** தர்ம சிந்தனை, வாக்கு வன்மை, பயண நன்மை.

**மிதுனம்:** தன யோகம், காரிய சித்தி, கடும் உழைப்பு.

**கடகம்:** மனக்கலக்கம், உடல் பிரச்சினை, தொழில் நஷ்டம்

**சிங்கம்:** குடும்பவேற்றுமை, வெளியார் தொல்லை, வெறுப்பு

**கன்னி:** புத்திரர் முன்னேற்றம், அதிகவருவாய், பாராட்டு.

**துலாம்:** அந்தஸ்து, கூடிய உறவு, குடும்ப மகிழ்ச்சி.

**விருச்சிகம்:** ஆரோக்கியக் குறைபாடு, விதண்டாவாதம், அலைச்சல்.

**தனுசு:** தீராத பிரச்சினை, மனக்குழப்பம், சகோதர பாசம்.

**மகரம்:** தொழில் சிறப்பு, மனைவி சாதுரியம், சுபகாரியம்.

**கும்பம்:** குடும்ப விசனம், மூட்டு வலி, தேவையற்ற பிரச்சினை.

**மீனம்:** அதிகாரிகள் சன்மானம், இல்லறசுகம், விருந்து வைபவம்.

ஜோஸ்யர்

# அச்சுவேலி கோத்தணியில் விசேட செயல்முறை வகுப்பு

(ஏழாலை)

அச்சுவேலி கோத்தணிப் பாடசாலைகளின் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்கும், புத்தூர் கோத்தணி ஆரம்ப வகுப்புக்களின் ஆசிரியர்களுக்கும் விசேட செயல்முறை வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. மேற்படி இரண்டு கோத்தணி அதிபர்களும் இணைந்து இவ்வகுப்பினை நடாத்தவுள்ளனர்.

வகுப்பு மாணவரின் உளவியல் நடத்தை, வகுப்பு முகாமைத்துவம், ஆரம்பவகுப்புக்களின் செயல்முறைக் கற்பித்தல் என்பவை பற்றி இரண்டு முழுநாள் கருத்தரங்கும் செயலமர்வும் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (165-கி)

## கிராமிய உத்தியோகத்தர்களுக்கு

# அலுவலக தளபாடங்களை வழங்க நடவடிக்கை

(உடுவில்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்குத் தேவையான அலுவலகதளபாடங்கள் மற்றும் அலுவலக பைகள் போன்றவற்றை வழங்குவதற்கு வடக்கு-கிழக்குமாகாணசபைநடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இப்பகுதிகளில் கடமையாற்றும் கிராமசேவையாளர்களின் எண்ணிக்கை, அவர்களுக்குத் தேவையான தளபாடங்கள் பைகள் போன்ற விபரங்கள் திரட்டப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் சுமார் இரண்டாயிரம் கிராம உத்தியோகத்தர்களுக்கும் அலுவலக தளபாடம், அலுவலகப் பைகள் வழங்குவதற்குதேவையான சுமார் நாற்பது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கிடுசெய்து தருமாறு வடக்கு-கிழக்கு மாகாணசபையின் உள்துறை பிரதிச் செயலாளர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ், பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சைக் கேட்டுக்கொண்டுள்ளார். (109)

## நெற்செய்கையாளர்க்கு
# மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

1993/94 காலபோக நெற் செய்கையாளர்களுக்கு நெற் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டத் தொடர்பாளர் அலுவலகங்களில் வைத்து இன்று முன்றாந் திகதி தொடக்கி மண்ணெண்ணெய் வழங்குவதற்கான நடவடிக்கையினை யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள விரும்பும் நெற் செய்கையாளர்கள் நெற்செய்கையினை மேற்கொள்ளும் பரப்பளவு உட்பட சகல தகவல்களையும் உரிய முறையில் வழங்குவதுடன் தமது குடும்பப்பதிவு அட்டை மூலம் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படின் நெற்செய்கையாளர்கள் தமது பகுதி வட்டத் தொடர்பாளர் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---

## இனப்பிரச்னை தீர்வுக்கு
# சமாதானத் திட்டம் எதனையும்
## தொண்டமானிடம் கையளிக்கவில்லை
## திலகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வுக்கான எதுவித சமாதானத் தீர்வையும் அமைச்சர் திரு. தொண்டமானிடம் தான் சமர்ப்பிக்கவில்லையென பாரீஸ் நகரில் திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்ததாக வெரித்தாஸ் அதன் செய்தி அறிக்கையில் குறிப்பிட்டது.

இது தொடர்பாக பாரிஸிலிருந்து வெளியாகும் "ஈழநாடு" பத்திரிகைக்கு திரு. திலகர் பின்வருமாறு தெரிவித்துள்ளார் எனவும் வெரித்தாஸ் குறிப்பிட்டது.

பாரிஸில் தாம் தொண்டமானைச் சந்தித்தாகவும் ஆனால் இனப்பிரச்னை தீர்வுக்கான சமாதானத்திட்டம் எதனையும் தான் அவரிடம் சமர்ப்பிக்கவில்லையெனவும் திரு. திலகர் குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் திரு. தொண்டமான் வெரித்தாஸ் வானொலிக்கு தெரிவித்ததாவது:

பாரிஸ் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் திரு. லோறன்ஸ் திலகர் என்னைச் சந்தித்தார். இனப்பிரச்னைதீர்வுக்கு சமஷ்டி ஆட்சி முறை ஏற்படுத்துவதில் விடுதலைப்புலிகள் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதாகவும் தான் யாழ்ப்பாணம் சென்றால் விடுதலைப்புலிகள் தலைவர்களைச் சந்தித்துப்பேச முடியும் எனவும் திரு திலகர் தன்னிடம் தெரிவித்ததாக அமைச்சர் கூறினார். —இ

---

## இனப்பிரச்னை தீர்வுக்கு
# அனைவரின் பங்கும் வேண்டும்
## -பிரதமர் ரணில்

(கொழும்பு)

இனப்பிரச்னை தொடர்பாக எதிர்காலத்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையில் தமிழ், சிங்கள கட்சிகள் கலந்து கொள்வது அவசியம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடரும் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்குநல்லதொரு சூழ்நிலையை அரசு எதிர்பார்ப்பவாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

---

## சங்கீத ஆசிரியர்களுக்கான
# சேவைக்கால பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சங்கீத ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி முன்னரே திட்டமிட்டபடி தவணை முன் திட்டமிடல் செயலமர்வு கல்விக்கோட்ட ரீதியாக பின்வரும் திகதிகளில் நடைபெறவிருப்பதால் சங்கீத ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளும்படி யாழ் கல்வித் திணைக்கள சங்கீத பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. கணபதிப்பிள்ளை கேட்டுள்ளார்.

பருத்தித்துறை — 3-9-93 காலை 8-30 யா/வட இந்து மகளிர் கல்லூரி.

பண்டத்தரிப்பு — 6-9 93 காலை 8-30 யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.

யாழ்ப்பாணம் — 7-9-93 காலை 8-30 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

சாவகச்சேரி — 9-9-93 காலை 8-30 யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

வேலணை — 10-9-93 காலை 8-30 யா/சென் ஜோசப்ஸ் அக்கடமி.

மாருதனுமடம் — 11-9-93 காலை 8-30 யா/இராமநாதன் கல்லூரி மண்டபம்.

---

## ஒருநாள் கிரிக்கெட்போட்டி:
# தென்னாபிரிக்காவிடம் இலங்கை தோல்வி

(கொழும்பு)

இலங்கைக்கும்- தென்னாபிரிக்காவுக்குமிடையில் கொழும்பு செத்தாராம விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற 2-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை 124 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 222 ஓட்டங்களைப்பெற்றது. இலங்கை 33 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 98 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (வி)

---

## பட்டதாரி சம்பளம் பெறாத
# ஆசிரியர்கள் கவனத்திற்கு

(திருநெல்வேலி)

ஆசிரிய சேவையில் உள்ள பட்டதாரிகள் பட்டதாரிச் சம்பளம் பெறுவதற்காக அவர்களுடைய விபரங்களை கல்வித்திணைக்களம் கோரியுள்ளது.

அரச அறிவித்தலின்படி 2-1-88 ற்குப்பின் சேவையில் உள்ளபோது பட்டம்பெற்றவர்களிலும் 1-6-91 லிருந்து 31-12-92 வரை சேவையிலுள்ளபோது பட்டம்பெற்ற ஆசிரியர்களின் விபரங்களும் கோரப்பட்டுள்ளன இவர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுடைய பெயர், நியமனத்திகதி, பிரிவு, பட்டம், பாடங்கள் ஆகிய விபரங்களே கோரப்பட்டுள்ளன. விரைவில் இவர்களுக்கு பட்டதாரிச் சம்பள அதிகரிப்புவழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (157)

---

### நூதனசாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நூதனசாலையின் பாதுகாப்பு இதுவரை காலமும் தனியார் பாதுகாப்புநிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

---

### ஹமில்டன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

தாம் அவுஸ்திரேலியாவுக்கு செல்வதிலும் பார்க்க தனது சொந்த ஊரான ஹலுக்குண்டு யாவாவுக்குப் போவதாக ஹமில்டன் வனிகசிங்கா தெரிவித்திருந்தார்

நீண்டகால இராணுவ சேவையில் கடமையாற்றிய ஜெனரல் ஹமில்டன் தற்போது இராணுவ தளபாட கொள்வனவிற்காக மலேசியா சென்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மண்கிண்டிமலை முகாம் தாக்குதல் மற்றும் வடக்கு-கிழக்கு யுத்தமுனைகளில் படையினருக்கு ஏற்படும் பின்னடைவுகளால் இராணுவ தளபதிகள் மற்றும் கூட்டுப் படைத் தலைமையகத்திற்கும் இடையேஏற்பட்ட பெரும் கருத்து மோதல்களின் விளைவே ஜனாதிபதியின் மேற்கண்ட அறிவிப்பு என பரவலாக கருத்து தெரிவிக்கப்படுகிறது. (எ)

---

## ராஜீவ் வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடாத்திவரும் சிறப்பு நீதிமன்றம் தனது விசாரணையை இம் மாதம் 8 ம் திகதிவரை ஒத்திப் போட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினாலேயேவிசாரணை ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

---

### புறூனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கையில் அவை வெடித்ததில் இரு இராணுவத்தினர் அதே இடத்தில் பலியானதுடன் மற்றும் நால்வர் படுகாயமடைந்ததுடன் ட்றக் வண்டியும் முற்றாகச் சேதமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

---

## புலிகள் அரசியலில் இணைய
# அரசு ஒத்துழைப்பு வழங்கும்
## - சபாநாயகர் முஹம்மது

(கொழும்பு)

பிரதான அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு விடுதலைப்புலிகள் விருப்பமாக இருக்கும் பட்சத்தில் அரசு அதனை வரவேற்கத் தயாராக இருக்கிறது சபாநாயகர் அல் ஹாஜ் எம். எச். முஹம்மது இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் பத்திரிகையாளர்கள் மத்தியில் அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது!

அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு விடுதலை புலிகளுக்கு அரசு ஒத்துழைப்பு வழங்கும் எனினும் புலிகள் முதலில் இந்த யுத்தத்தை ஒரு முடிவுக்குக்கொண்டு வருவதாகக் கூறவேண்டும் என்றார். (இ)

---

### முல்லையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள் இரு குண்டுகளை வீசிவிட்டுச் சென்றன.

மேற்படி இரு குண்டு வீச்சுக்களாலும் பொதுமக்களின் உடைமைகள் பலத்தசேதம் அடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. - எ

---

### இந்தியப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் படகும் மூழ்கடிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

நேற்று பருத்தித்துறைக்கு அப்பால் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த முத்துக்குமார் என்று பெயர் பொறித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த மீன் பிடிப்படகொன்றின் மீது இலங்கை கடற்படையினர், பலத்த பீரங்கித் தாக்குதலையும், துப்பாக்கி வேட்டுக்களையும் மேற்கொண்டதில் படகில் இருந்த நால்வரில் ஒருவர் பலியானார். மூவர் படுகாயமடைந்தனர்.

பீரங்கித் தாக்குதல்களுக்குள்ளான மீன்பிடிப்படகு கடலுள் மூழ்கியதனால் காயங்களுடன் கடலில் தத்தளித்த 3 மீனவர்களையும் கடற்படையினர் மீட்டுக் கொண்டு சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த மீனவர்களின் நிலை பற்றி அறிந்து உடன் தமக்கு தகவல் தரும்படி தமிழ்நாடு அரசு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் கோரியுள்ளது.

இத்தாக்குதல் பற்றி இலங்கைக் கடற்படையினர் தெரிவிக்கையில்: விடுதலைப்

---

### பொலிகண்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. மீனவர்கள் கடலுக்கு செல்லாதமையால் பலத்த உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. [150-எ]

---

### வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிட்ட இரு சியாமாசெட்டி குண்டுவீச்சு விமானங்கள் 4 குண்டுகளை அடுத்தடுத்து வீசியதாகவும் கடற்கரையோரமாக வீசப்பட்ட இக் குண்டு வீச்சினால் மீனவருக்குச் சொந்தமான படகுகள் பல பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பின்னர் நண்பகல் 12-30 மணியளவில் மீண்டும் இப் பகுதிக்கு வந்த விமானங்கள் இரண்டாவது தடவையாகவும் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

பலத்த சத்தத்துடன் வீழ்ந்து வெடித்த இக்குண்டு களையடுத்து பொதுமக்கள் பதுங்கு குழிக்குள் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —எ-.60-56

---

### கல்முனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துகள் கொண்டு செல்லப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. -எ

---

### செம்மணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்று நாட்களாக காணப்பட்ட இச்சடலத்தில் வெள்ளைச் சாரமும், பிறவுண் கலர் சேட்டும் காணப்பட்டது.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க இச்சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் இனம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சடலம் ஊதிப் பருத்த நிலையில் துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது.

சடலத்திற்கு அருகில் கிருமி நாசினிப் போத்தல் ஒன்றும் காணப்பட்டது.

—56-170

---

### ஸ்ரீமானியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துலத்முதலிக்கு வழங்கி அவரை அரசியலில் ஈடுபடுத்த முன்னணியின் உறுப்பினர்கள் முயன்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது முன்னாள் அமைச்சர் திரு. காமினிதிஸநாயக்கா தலைமையில் இயங்கி வரும் ஐ. ஐ. தே. முன்னணி ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருவதால் முன்னணி அழிந்துவிடுமெனவும், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு முகமாகவே ஸ்ரீமானி அத்துலத்முதலிக்கு ஒரு தலைமைப்பதவியை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

### யாழ். பல்கலைக்கழகத்துக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் தபாலகபொதி அறையில் வைக்கப்பட்டிருந்த சமயமே இப்புத்தகங்கள் களவாடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிய வருகிறது.

1990ம் ஆண்டு பிரிட்டனிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்நூல்கள் இதுவரையில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு வந்து சேராததையடுத்து யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கொழும்பு தபால் மா அதிபருடன் தொடர்பு கொண்டதையடுத்தே புத்தகங்கள் களவாடப்பட்டது பற்றி அறிவிக்கப்பட்டதாம்.

இவ்விடயம் சம்பந்தமாக யாழ் பல்கலைக்கழகத்தினர் பெரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். .எ

---

புலிகளின் தற்கொலைப்படை படகு என்று தாம் தவறுதலாக நினைத்து இ படகுமீது தாக்குதல் மேற்கொண்டுவிட்டதாக கூறியுள்ளனர். (வி)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஆதரவாளர்களால், யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under license Number B/10 536/B